இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 29.06.2026

# நல்லா ஆள்றாங்க ஆட்சி...!

**தனது ஆஸ்தான ஜோசியருக்கு அரசாங்க பதவி கொடுத்தார் விஜய். தனது புரமோஷன் அட்மினுக்கு அரசாங்க பதவி கொடுத்தார் விஜய். இது வரையிலான தனது செலவுகளைப் பார்த்துக் கொண்ட ஒருவருக்கு அரசாங்க பதவி கொடுத்தார் விஜய். ஓடாத தனது படத்தை எடுத்த படத்தின் தயாரிப்பாளருக்கு அரசாங்க பதவி கொடுத்துள்ளார் விஜய். இனி அடுத்தடுத்து அவர் யாருக்கு எல்லாம் என்ன பதவி எல்லாம் கொடுப்பார் என்பதைக் கணிப்பது கஷ்டமான காரியம் அல்ல.**

தூய ஆட்சி என்று சொல்லி விட்டு கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் முகத்தில் துப்பி வருகிறார் விஜய். சொந்தப் புத்தியும் இல்லை, சொல்லுவார் சொல்லும் உறைக்காது என்பதற்கு இந்த நியமனங்களே சாட்சியங்கள்.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்படுகிறவர், தமிழ்நாட்டின் குரலை ஒன்றிய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டியவர். மாநில அரசுக்கும் ஒன்றிய அரசுக்கும் இணைப்புப் பாலமாக இருக்க வேண்டியவர். தமிழ்நாடு அரசின் சார்பில் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஒன்றிய அரசின் துறை சார்ந்த அமைச்சகங்கள் மூலமாக செயல்படுத்த வைக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு. அவர் ஒன்றிய அமைச்சர்களோடு பேச வேண்டும். ஒன்றிய அரசுத் துறை செயலாளர்களோடு பேச வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு சாதகமாக, அல்லது பாதகமாக ஒன்றிய அரசு செயல்படுவதைக் கண்காணித்து மாநில அரசுக்கு சொல்ல வேண்டும். இதையெல்லாம் செய்ய வேண்டிய ஒருவருக்கு தமிழ்நாடு தெரிந்திருக்க வேண்டும். மாநில நிர்வாகம் தெரிந்திருக்க வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் தெரிந்திருக்க வேண்டும். இவர் பேரைச் சொன்னால் டெல்லியில் இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளுக்காவது தெரிந்திருக்க வேண்டும்.

விஜய்க்கு மட்டுமே தெரிந்த, விஜய்யை வைத்து படம் எடுத்த, மற்றபடி தமிழ்நாட்டின் திரைத்துறைக்கே கூட தொடர்பு இல்லாத, கர்நாடகாவை மையமாகக் கொண்ட கே.வெங்கட நாராயணா என்பவரை தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக நியமித்திருக்கிறார் விஜய். கேட்டால், 'அவர் கர்நாடகம் அல்ல, ஆந்திரா' என்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். சரி, **தமிழ்நாட்டைச் சாராத ஒருவரைத்தான் தமிழ்நாட்டின் சிறப்புப் பிரதிநிதியாகப் போட வேண்டுமா? ஜோசியர், நண்பர், அட்மின் வரிசையில் இவரையும் பக்கத்திலேயே சேர் போட்டு வைத்துக் கொள்ள வேண்டியது தானே? அவரை எதற்கு டெல்லி பிரதிநிதி என்று சொல்லி தமிழ்நாட்டை அவமானப்படுத்த வேண்டும்?**

'கே.வெங்கட நாராயணாவுக்கு என்ன அனுபவம் இருக்கிறது?' என்ற நியாயமான கேள்வியை பலரும் கேட்கிறார்கள். நியாயமான கேள்விதான். 'நமக்கே எந்த அனுபவமும் இல்லை, டெல்லி சிறப்புப் பிரதிநிதி மட்டும் அனுபவம் வாய்ந்தவரை நியமிக்க வேண்டுமா?' என்று முதலமைச்சர் விஜய் நினைத்திருக்கலாம்.

ஜோசியரை, தனக்கு செலவு செய்பவரை, தனது அட்மினை, தனது படத் தயாரிப்பாளரை நியமித்ததற்காக இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று நாம் ஆராய்ச்சி செய்வதற்கு முன்னால் இதில் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது விஜய்யின் துணிச்சலைத்தான். 'எவரையும் நான் நியமிப்பேன், கேள்வி கேட்க எவருக்கும் உரிமை இல்லை' என்று நினைக்கிறார் விஜய்.

தான் என்ன செய்தாலும் தனது கூட்டணிக் கட்சிகள் தலையாட்டி ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறார் விஜய். அவர்களுக்கு சொரணையோ கோபமோ வராமல் இருக்க மந்திரி பதவியைக் கொடுத்தாகி விட்டது. அவர்கள் தயவும் தேவைப்படாமல் ஐந்து பேரை ராஜினாமா செய்ய வைத்துள்ளோம். இடைத்தேர்தலில் அவர்களை வெற்றி பெற வைத்தால் இந்தக் கூட்டணிக் கட்சிகள் தயவும் தேவையில்லை.

**ஊடகங்கள், இன்னமும் தி.மு.க.வைக் குறை சொல்வதில் தான் சுயசுகம் கண்டு வருகின்றன என்பதையும் விஜய் நன்கு புரிந்து வைத்துள்ளார். அவர்கள் எதிர்ப்பும் வராது.**

தனது கட்சிக்கு பொதுக்குழுவும் இல்லை. செயற்குழுவும் இல்லை. கேள்வி கேட்பார் எவருமில்லை. கிடைத்த பதவியை தக்க வைத்தால் போதும் என்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள். அவர்கள் மத்தியிலும் சலசலப்பு வராது.

**இத்தகைய சூழலில் தான் வைத்ததுதான் சட்டம். தான் செய்வதுதான் ஆட்சி என்று இருக்கிறார் முதலமைச்சர் விஜய். தேர்தலுக்கு முன்னதாக அவர் பேசிய பேச்சில் ஒரு துளி உண்மையான நம்பிக்கை இருந்திருக்குமானால் திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மீது பாலியல் புகாரை தனது ரசிகை ஒருவரே வைத்த மறுநிமிடமே அவரது பதவியை பறித்து கைது செய்திருப்பார்.**

**அமைச்சர் சரத்குமார், போதை மருந்து பயன்படுத்தும் வீடியோ காட்சிகள் வெளியானதும், அவரது அமைச்சர் பதவியை பறித்திருப்பார். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உயர்கல்வி அமைச்சர் விஸ்வநாதனின் நடவடிக்கை மிக மிக அசிங்கமானது. அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கி இருப்பார்.** இது எதுவும் செய்யவில்லை விஜய். ஏனென்றால் இவர்கள் ஒவ்வொருவரும் அவருக்குத் தேவை. இவர்கள் எண்ணிக்கையில்தான் அவரது பதவி நாற்காலியே இருக்கிறது. எனவேதான் பாலியல், போக்சோ, போதைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்களால் முதலமைச்சர் நாற்காலியில் நீடித்துக் கொண்டிருக்கிறார் விஜய்.

**முதலமைச்சர் விஜய் மீது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனைவி போட்ட வழக்கு,சென்னை உயர்நீதிமன்றத்தில் வருமான வரி ஏய்ப்பு வழக்குகள், கரூரில் 41 பேர் மரணத்துக்கு காரணமானவர் என சி.பி.ஐ. வழக்கு. இப்படிப்பட்டவர் யார் மீது நடவடிக்கை எடுக்க முடியும்? தனது தகுதிக்கு ஏற்றவர்களை அவர் நியமித்துக் கொள்கிறார். நல்லா ஆள்றாங்க ஆட்சி...!**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.06.2026) சென்னை S.I.E.T. ஸ்போர்ட்ஸ் பெவிலியன் வளாகத்தில் நடைபெற்ற மருத்துவர் பி. பஷீர் அகமது அவர்களின் மகள் டாக்டர் பி.ரீஷ்மான் ஃபஹ்மிதா – டாக்டர் எம்.ஷாஃபயாஸ் ஆகியோரின் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

# ஒரு அமைச்சருக்கு நிகரான பதவியில் கர்நாடகாவைச் சேர்ந்தவர் அமர்த்தப்படுவதா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 29 - தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:

2 கேள்விகள்தான் எழுகின்றன. தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக டெல்லியில் ஒலிக்க வேண்டிய அரசு பொறுப்பில், ஒரு அமைச்சருக்கு நிகரான பதவியில் கர்நாடகாவைச் சேர்ந்த ஒருவரை அமர்த்தியுள்ளது த.வெ.க. அரசு.



அந்த பொறுப்புக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கூட தகுதியானவர் இல்லையா?.

மேகதாது அணை கட்டும் விவகாரம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த பிரச்சினைகளில், தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நபர் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக செயல்படுவாரா அல்லது அவரது சொந்த மாநிலமான கர்நாடகாவின் பிரதிநிதியாக செயல்படுவாரா?

இவ்வாறு அவர் பதிவில் கூறப்பட்டுள்ளது.

### என் மீது அவதூறு கருத்துக்கள் வெளியிட்ட

# அமைச்சர்கள் ஆதவ் அர்ஜீனா - நிர்மல்குமார் மீது சட்ட நடவடிக்கை!

## சபரீசன் சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ்!

சென்னை, ஜூன் 29 - உண்மைக்கு புறம்பான கருத்துக்களை தெரிவித்த அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் ஆகியோர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கோரி சபரீசன் சார்பில் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சபரீசன் சார்பில், தமிழ்நாடு பொதுப் பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மற்றும் மின் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் ஆகியோருக்கு வழக்கறிஞர் ஏ.எஸ்.அஸ்வின் பிரசன்னா நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதில், பொது சேவை, உண்மையான, நேர்மையான, அர்ப்பணிப்புமிக்க செயல்பாடுகளின் மூலம் தனிப்பட்ட, சமூக, தொழில் ரீதியான வாழ்க்கை ஆகியவற்றில் களங்கமற்ற நற்பெயரை கொண்டுள்ள சபரீசனுக்கு எதிராக, அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா மற்றும் நிர்மல்குமார் ஆகியோர் ஜூன் 25ஆம் தேதி நடந்த ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துகள் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களில் பரவி, அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சபரீசன் குறித்து இரு அமைச்சர்களும் ஊடகங்களில் தெரிவித்த கருத்துகளை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்; அதே ஊடகங்கள் முன்பாக சபரீசனிடம் இரு அமைச்சர்களும் மன்னிப்பு கேட்க வேண்டும்; சம்பந்தப்பட்ட வீடியோ பதிவுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; எதிர்காலத்தில் சபரீசனுக்கு எதிராக அவதூறான, இழிவான, உள்நோக்கத்துடன் கூடிய கருத்துகளை வெளியிட மாட்டோம் என நிபந்தனையற்ற உறுதிமொழியை எழுத்துப்பூர்வமாக வழங்க வேண்டும் எனவும் அந்த நோட்டீசில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றை 15 நாட்களுக்குள் செய்யத் தவறினால், சட்டப்படி குற்றமாக கருதப்படும் இந்த அவதூறு கருத்துக்கள் குறித்து, சட்டரீதியான நடவடிக்கையை இரு அமைச்சர்களும் சந்திக்க நேரிடும் எனவும் சபரீசன் சார்பில் அனுப்பப்பட்டுள்ள வக்கீல் நோட்டீசில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடக பின்னணியை கொண்டவரை டெல்லி பிரதிநிதியாக நியமிப்பதா?

## பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, ஜூன் 29-

கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருப்பது, "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது" போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது என தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் டெல்லி பிரதிநிதியாக வெங்கட நாராயணா நியமிக்கப்பட்டிருப்பதை கடுமையாக கண்டிக்கிறோம். ஏற்கனவே கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் மற்றும் அங்குள்ள நீர்வளத்துறை அமைச்சர், "எங்கள் மாநில எல்லைக்குள் மேகதாது அணையை கட்டுவதை யாராலும் தடுக்க முடியாது" என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக தமிழ்நாடு கர்நாடக மாநிலங்களுக்கு இடையே காவிரி நீர்



பிரச்சினை நீடித்து வரும் நிலையில், மேகதாது அணை தொடர்பாகவும் தமிழ்நாட்டின் உரிமையை பாதுகாக்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. உச்சநீதிமன்றமும், காவேரி மேலாண்மை தொடர்பான அமைப்புகளும் இந்த விவகாரத்தில் சட்ட மற்றும் நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்கியுள்ள நிலையிலும், கர்நாடக அரசு, அணை கட்டும் முயற்சியில் உறுதியாக இருப்பதாக தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில், கர்நாடக பின்னணியை கொண்ட ஒருவரை தமிழ்நாட்டின் டெல்லி பிரதிநிதியாக நியமித்திருப்பது பொதுமக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

இது, "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது" போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான நபர்கள் பலர் இருக்கையில், ஏன் இந்த நியமனம் என்பதற்கு தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். எனவே, தமிழக அரசு இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்து, வெங்கடநாராயணா நியமனத்தை திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கர்நாடகாவைச் சேர்ந்தவரை

# டெல்லி பிரதிநிதியாக நியமிப்பது தமிழ்நாட்டுக்கு பயன் அளிக்காது!

## கம்பம் செல்வேந்திரன் கண்டனம்!

கம்பம், ஜூன் 29-

கர்நாடகாவைச் சேர்ந்தவரை டெல்லி பிரதிநிதியாக நியமிப்பது தமிழ்நாட்டுக்கு பயன் அளிக்காது என கம்பம் செல்வேந்திரன் தெரிவித்தார்.

தேனி மாவட்டம், கம்பத்தில் தமிழ்நாடு அரசின் முன்னாள் டெல்லி சிறப்புப் பிரதிநிதி கம்பம் செல்வந்திரன் அளித்த பேட்டி வருமாறு:

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக கர்நாடகாவைச் சேர்ந்த வெங்கட நாராயணாவை,



முதல்வர் விஜய் நியமித்த செய்தி அதிர்ச்சி அளித்தது. தமிழ்நாடு அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து, தேவைகளைப் பெற்று மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டிய பெரிய பொறுப்பு டெல்லி பிரதிநிதிக்கு உள்ளது.

அப்படிப்பட்ட பதவியில் தமிழகத்தை சேர்ந்தவரை நியமிக்காமல், கர்நாடகாவை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த நியமனம் தமிழ்நாட்டுக்குப் பயனளிக்காது. ஏனென்றால், தமிழன் என்ற உணர்வு இருக்கிறவர்களால்தான் தமிழ்நாட்டுக்குப் பயனளிக்கும் திட்டங்களுக்காகப் போராட முடியும், வாதாட முடியும். கலைஞர் முதல்வராக இருந்த 2006-2011 வரை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக நான் இருந்தேன்.

எம்பியாக 5 ஆண்டு இருந்த காரணத்தால், டெல்லியில் உள்ள அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் எனக்கு அறிமுகம் இருந்தது. அவர்களை எப்படி அணுகுவது என்பதும் தெரிந்திருந்தது. அதனால் பணியாற்றுவது எளிதாக இருந்தது. எதுவுமே தெரியாத ஒருவரைத் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி என்று நியமித்தால், அவரால் திக்குத் தெரியாத காட்டைப் போல அலைந்து திரிய முடியுமே தவிர, முறையாக அணுக முடியாது.

ஒருவேளை விஜய்க்கு டெல்லியில் ஏதாவது படப்பிடிப்பு இருக்கிறதோ தெரியவில்லை. தனக்கு ஒரு படம் தயாரித்த தயாரிப்பாளருக்கு, சம்பளத்தைக் குறைத்து வாங்கி உதவலாம் அல்லது வேறு ஏதாவது முதல்வர் என்ற முறையில் செய்து கொடுக்கலாம். அப்படி அன்பை காட்டலாமே தவிர, உயர் பதவிகளில் நியமிப்பது நல்ல முன்னுதாரணமாக இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.